அக்டோபர்: 25

# இறுதிக் காலம்

## வாசிக்க: தானியேல் 11,12 அதிகாரங்கள்

இன்றோடு தானியேல் புத்தகத்தை நிறைவுசெய்யப்போகிறோம். இன்று சிறுபிள்ளைகளாயிருக்கும் நீங்கள் வாலிப வயதை அடையும் போது எதிர்கொள்ளும் சாவால்களை சந்திக்க தானியேல் குறித்த அறிவு அவசியமானது. வேதப்புத்தகமானது பழைய ஏற்பாடு புதிய ஏற்பாடு என்ற இரண்டு புத்தகங்களை உள்ளடக்கியது. காலவரிசையில் படிக்கும் போது மல்கியாவுக்கும், மத்தேயு புத்தகத்திற்கிடையில் 400 ஆண்டுகள் கர்த்தர் பேசாத ஆண்டுகளாக வெறுமையாக உள்ளது. ஆனால் அந்த காலத்தில் நடக்கப்போகும் சம்பவங்கள் குறித்து தானியேல் 11ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ளது. அக்காலத்தில் தான் ரோம, கிரேக்க பேரரசுகளின் காலங்கள் ஆகும். 11,12ம் அதிகாராத்தில் அந்திக்கிறிஸ்துவை குறித்தும் உலகத்தின் முடிவு காலத்தில் நடக்கப்போகும் சம்பவங்கள் குறித்தும் சொல்லப்பட்டுள்ளது. வெளிப்படுத்தல் புத்தகத்தில் முடிவுகாலத்தை குறித்து விரிவாக கற்கலாம். இன்று அந்திக்கிறிஸ்துவை குறித்துப்படிக்கலாம். ராஜா தனக்கு இஷ்டமானபடி செய்து, தன்னை உயர்த்தி, எந்த தேவனிலும் தன்னைப் பெரியவனாக்கி, தேவாதி தேவனுக்கு விரோதமாக ஆச்சரியமான காரியங்களைப் பேசுவான். தானியேல் 11: 36,

## கேள்வி:

அந்திக்கிறிஸ்துவை எப்படி அடையாளம் கண்டுகொள்வது?

## பதில்:

கிறிஸ்துவின் எதிரி அந்திக்கிறிஸ்து என்று பொருள்படும். ஆனால் இன்றும் கிறிஸ்துவுக்கு எதிராக அல்லது விரோதமாக இதன் ஆவிகள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இறுதிக்காலத்தில் வரப்போகும் அந்திக்கிறிஸ்து மேலே நாங்கள் படித்தது போல அவன் ஒரு ராஜாவாக வருவான். அனேக தேசங்களை தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவான். யூதர்களும் அவனை ஏற்றுக் கொள்வார்கள். எருசலேம் தேவாலயத்தை திரும்பவும் கட்டுவார்கள். மிகப்பெரிய போர் மிகப்பெரிய அழிவு நடக்கும். இறுதியில் அவன் நரகத்துக்கு தள்ளப்படுவான். பிள்ளைகளே தாழ்மை, பெருமை இந்த இரண்டு குணாதிசயத்தில். தாழ்மை இயேசப்பாவின் பிள்ளைகளுக்குரியது. பெருமை பிசாசு, அந்திக்கிறிஸ்துக்குரியது. எங்களை சுற்றிவர உள்ள உறவுகள் நண்பர்கள் மத்தியில் நான் பெரியவன், அறிவாளி, கெட்டிக்காரன் என்ற மனப்பாண்மையோடு வாழுவோமானால் எங்களிடம் தாழ்மையில்லை. எல்லோரையும் நேசித்து குறைகள், தேவைகள் இருப்பவர்களை தாங்கி வாழவேண்டும். எமக்கு கிடைக்கும் வெற்றிகள் இயேசப்பா தந்தவை என்று சொல்லி அவருக்கு நன்றி சொல்லி வாழப்பழக வேண்டும். தானியேலைப் பாருங்கள் முழங்காலில் நின்று மூன்று வேளை ஜெபிப்பார். அவர் எவ்வளவு பெரிய அதிகாரியாய் இருந்தவர். சொப்பனங்களுக்கு அர்த்தம் சொன்னவர், தேவதூதன் அவரோடு பேசினவர். அப்பேற்பட்ட தானியேல் மனத்தாழ்மை உள்ளவராயிருந்தார். இதை வாசிக்கும் மகனே மகளே நீ வாருங்கால தானியேலாக இருக்கவேண்டும்.

தீமையை வெறுப்பதே **கர்த்தருக்கு**ப் பயப்படும் பயம்; பெருமையையும், அகந்தையையும், தீய வழியையும், புரட்டுவாயையும் நான் வெறுக்கிறேன்.
**நீதிமொழிகள் 8:13**

## ஜெபம்

பரலோக பிதாவே!
தாழ்மையுள்ள பிள்ளைகளாய் தயவுள்ளம் படைத்தவர்களாய் வாழுவோம். பெருமை அகந்தை போன்ற அன்னிய ஆவியின் குணங்கள் எங்களை அணுகாதபடி காத்து வழிநடத்துங்கப்பா. ஆமென்